கொ லெஹஃம் வ்ருஹயா வஸ்ரவநி
ஸ்ர-ஸ்ரொவ்ய்-ர்-ஸ்ரவெ தீவா ஹாஸ்ரஸ்ரகஃம் ॥ 5

ஸ்ரீஃதெஸ்ரவாஸ்ர வ-ஸ்ரிநி ந்ருஸ்ர்-ஹரி
ஸ்ரம்ஸ்ரிவொஃம் வஸ்ர்-நாஹாவ்ருவ-ஸ்ரிநி
யெஸ்ர்-வாஸ்ரெந்ருஜ்ஜ்ரா நவம்தஃம் ஸ்ர-ஸ்ர்-தி
ஃநவயிகாம் யொஸ்ரி நஸ்ரஸ்ரா ஃகஸ்ர-ஸ்ர்-வஸ்ர்-ந்ரு ।

தெதஷ்ஷெவி-ஃபுஜீரீஸ்ஸெஶம் கூட்டீவி
கூயவயா ஸ்ரையஸெ ஜெZவஶிஷ்டம்
ஷ்ஷொதும் ஜிஹ்வா ஶதீயா ஸுயது-
பு-வயொः வூலவாதீராஹுஸுகூஷ ॥ 6

ஶ்ரீலுக்ஷீ நாஃவிம்ஹகாரிஜதி-நெः வாஹாவநி கூடுதா
ஸெவாஶ்சுக-ஹுஸாழிவிஹ்தி தவஹுந்யாஃவாதீ-ஹொः வாவநாசு ।
ஜாதாः கிம் யாஸணைஹ்யொத யு-வயொஶ்ரீஷ்ணு-ஃ விநஜ்ர வாம்
விந்யாஃவாதீஃவவித்ரயொஷ்டு-ர கூஸயொஶ்ரிஷ்யாழிகாநாம் வஹா ॥ 7

உ-ஜ்ஞெஹ்ஸ்ஸாய நஶாஶநம்கி விஃவ-யாஹ்ஸ்வெஃஶ்வாஸம் ஶ்ரீவதிம்
யாயாதய்யவிஜொ வயா த-ந தயா கூவாஜெவ உந்யாஶஹெ ।
யக்ஷுகூவதி நயெந ஜெவி யு-வயொஹ்யாஷ்டீகூஷணம் ஜொகூஷணம்
நொவெஹ்ஸ்ஸம்ஹ்யதிவாமாஸாதி-ஜமதாம் உ-க்திஃ-வெவஜ்ஞெவ வா ॥8

ந வாஹா ஸ்ரு-திஜ்ஞா ந வாஙம்க்யதிஜ்ஞா
ந தம்தி ஸு-ஷிஜ்ஞி ந-ஃ ஜெ உம்தி ஸிஜ்ஞிः ।
ந காவ,்ஜ்ஞதாவி ஷ்ணு-திம் தாம் தயாவி
பூவகூஷ்ய Zம்வி-ரகூஷ பூஷாஹாஷ்ணுவதி ய்ாः ॥ 9

கூந்யாம் கெஷித்தயுஸுஜுயெः காஶி தாய-ஃபூஹா நா
ஹாணீம் வாஹாம் வி தாரணவியெவ-ஃாஃஷி தா நாம் வஜொதி ।
ஸம்தஷ்ஷுாஹு-ஷ்ணுவஶி ஸகயுஜ்ஞா நஸம்வீ-ஹா நாசு
ஸதாதா நாம் ஶ்ரீ ந்யஹரிஸுஃஜிவீஹாஹு-கெகூவாம் ஸஜொணயாழ் ॥ 10

ஶ்ரீவதிதः வாஹு-காவெகூஷயா வாஹு-கெ
ஶ்ரீ ந்யஸிம்ஹாஹ்யுகாய-ஃாத்ரீஹ-யொஶிநः ।
உஜ்ஞெஹ கூவாயிகூாம் தெந வெவெஷ்ணுவாः
வ-யிவ-ஃதஷ்ஷாம் கூயம் உ-யிவ-ஃ கூ-வ-ஃஜ்ஞயெஹா ॥ 11

ஸுஹா ந்யஸிம்ஹகாரிஜாதயொஶிநம் வஹாவநி
கூடீயயாதி-ராம் வயம் த-ந உந்யெஹ கூவம்வயாழ் ।
கூயி வூஸுஷ்ஷதெவதஸாம் ஹி ஶாஜ்ஞாஸாம் ஸ-ஸும்வயு
நுநம்வூஜுஷ்ஷுஹஸ்தி-ஸம்ய நாய ஸுங்கு-ஸுாய நழ ॥ 12

லக்ஷ்மீ-ர-யொஜ்ஞ நநி ஸுவ தயாம்
வாஹு-ஶ்ரீஜ்ஞ ந்யஸிம்ஹாரி ஸுாஸெः ।

ஶ ஹ்ரிஸ்ரீம்ஹ்ஸௌஶ்ரீஜகந்நமோ
லெஷாம் ஸுகீயம்நயபத்ரா ॥ 13

வாஉச்சீவிஹவெ வாஸ்ரீம்ஹமிந வாஶ்ரீவிஷ்ணுஸ
தூலெஷ்வ் ஸுஸ்ரிதுவிதஹதூஉலம்க்ரு தஸ்ரீஷ்ணே உயாஜலு நியெ ।
லக்ஷ்மீந்ருவிம்ஹரஶ்ரீகொவாஉயொகிவஉஸ்ரீகே ப்ரவஸ்ர ஜதி ஶ்ரம்
வஶ்ரீவ்ருநம்தமஸ்ரீண ஹ்ரூம்விஷ்ணவெஹந்ரு
ஸுஸ்ரீதெஹலகஸ்ரீம்ஹஉஉநம ॥ 14

யாதூர ஸ்ர ஶ்ரிஹீநா உலுதி நாஸஹரெஃ வாஉஸ்ரீகாஹெதஸ்ரீகாஸ்ரீயூ
ஸ்ரொவெஷ்ரீயூம்கலீநா ஶஶ ஸ்ரீவி உ நாஸாஃ வாஶ்ரீராஃ வாஉஸ்ரீகே ।
வஸவம் கூக்வா ஶதிம் கலம் வதிவஉகஶ்ரெ ஸ்ரொஹ்ருஸ்ரெயூர கூஷ்ணஸ
ஜூர்தஸ்ரீம் நாலும் தயாவி வூணயகலுஸஹதஷ்ருஷ்ட வாவெஉவ ஸ்ரீதி ॥15

ஶ்ரீஶாந்துலக்ஷ்மீந்ருவிம்ஹஃஶ்ரீ தஜநவஸுஹஃ வாஉஸ்ரீகாவூர்வுவாஉஃ
கதஸ்ரீம் ஸுஷ்டஷ்ருயாவி வூண தஜநவாரி தூணயாதூரம் நஸுஷ்டஃ ।
கூஹஸ்ரீஜிவுயஸ்ரீவெகூர நூஹரிஸுரிவொஃ வாஉஸ்ரீகெ
ஸுவஸ்ரீஸுவெஷ்ட
விஸ்ரீஷ்ணுஸ்ரீவெஷ்ட ஹ்ரியவ்ருவிலுஸ்ரீயஜநாஸ்ரீக்தி ஸ்ரொவ கூஷ்ணீயா ॥ 16

பெ கூவாம வாஉஸ்ரீ ஸகூஉஹதி உநஸ்ரீஜாஷ்ஸுவஸ்ரீயஸ்ரீஹிம் தாஉணீம்
தெ ஸவெஸ்ரீ ஸ தஜதம் வூயாதி நிதாரம் ஸஉர்ம்தூவாஹாஶிஹிஃ ।
ஶ்ரீ ஶ்ரீகூஷ்ணாரவிம்ஹகுரிஜஸ்ரீநஷ்டாஉஷ்ரீயாயாஷ்டஸுவ
வெஸுவெஸுஉஹ்ரிஷ்டஸ்ரீர்ருகுரணாஷ்ரீஉாஸுஹஸ்ரீஜநாஃ வஷ்ரீர்ருாம யாரணாஉஸ்ரெஹா ॥

கூஉகூவாஹாஉர்ருாஶிகாநாம வஂநஉவி ஸஉா கூயர்ருஹதாஃ வூவெஷஸ்ரீம
வதஸ்ரீ வாஉம ஸ ஹீதாஷ்ஸுஉஸி நாரவெதவெஸ்ரீஸ்ரீநி வெஸு ஹவதி ।
கூஉகூவ ஹதிம் ஹவதூர்ருாம ஶ்ருவணஉவி ஸகூஉஷ்ரீராஉஸ்ரீ ஹாஷ்ருர்ருாஶிகாநாம
ராஜதூர்ருாம தொஷஜதுகாநாம ஸஉஸி ஸுஹஸ்ரீஉதாஷ்ஸுவுவிஹா ஹவதி ॥

உஸ்ரீவ்ணஸ்ரீர்ருஸ்ரீவா ஹவதீ வூஜாநாம
வ்ருிகூவ கூஷ்ணஃஉஸ்ரீயிஸ்ரீ மதாஸ்ரீநிநஉஸ்ரீ ।
கூரொவதி உஸ்ரீவ்ணஸ்ரீமுணாஷ்ரீஸ்ரீவ்ணஸ்ரீர்ரா
ஸ்ரீஹாவநா கா ஸ்ரீர்ரஸ்ரீவாஉஸ்ரீகெ தெ ॥ 19

விநாவி ராமம் விநதிஷு நஶ்சிநம்
விராமிணீ வாஹு விராஜஸே க்ருதீ ।
விஶ்வதஶ்சக்ஷுஷே ஸுப்ரதீகம்
விஶ்வாயுஷம் விநிவக்-ஶ்வாம்ஸு ॥ 20

ஸேயம் ஶ்ரீ நாராயணாய ஸுஷ்டுதிர்நः வாஹ்வாவ நீஷ்வஷ்டு தீம்
உபஶ்ருத்யை உர்வந்தரிக்ஷ ஸுகாராணாய வாதீஶ்வஷ்யை யா வர்தா ।
காமகர்ஷீ தர்ம கோத்ர ஸர்ஷீ ப்ரஹ்மயா விதுஷீ-வஶ்ருணம்-ம் யஸ்ஸ்
ஸ்தோதாரணாம் பஂதாம் ஶ்ரியம் ச விவர்தயாமாஸ்தோ ஹ்யஸ்தீவ-ர்யாஷீ॥21

ஶ்ரீமத்கர்ஷீ நாராயணாய ஸுதீர்வாஹ்வாவ நீ ஸேவி நா
ராம்ஹாவாய-ர்ஸ்தவ தந ஸர்ஹூராண்கூவாவாதுண ஊக்ரயா கூ தழ ।
தேதயாஜ்ர-ர்ஸ நிவாஸி நா ஸர்கூ தி நாஃஶ்ரீவாஸ நாகீர்ண மர்தோஃ
வாஹ்விஷ்டோத்ரிம் விரம் விஜயதாம் ஸவர்ம்ஸஹாயாம் ஸர்ஹழ ॥

ஸ்ரீ:

ஸ்ரீ அழகிய சிங்கர்

[ஸ்ரீ உ. வே. வித்வான் யன். ஆர். கிருஷ்ணஸாமி அய்யங்கார், வக்கீல்.]

மஹத் ஆசார்யன் திருவடிப்ரபாவத்தையும், திருவுள்ளச்சீரையும், அந்தத் திருவடிகளில் ஆச்ரயித்தும், அவர்கள் க்ருபைக்குப் பாத்ர மாயும், உஜ்ஜீவனம் பெற எல்லாச் சேதனர்களும் முயலவேண்டிய ஆவச் யகத்தையும், சாஸ்திரார்த்தங்கள் நெருங்கிய திவ்ய ஸூக்திகளால் மஹநீ யாளான வித்வத்சிகாமணிகள் மிக்க மணம்பெற வமைத்த இதழ்கள் கொண்ட இந்த மலரில் அக்ஞனை அடியேன் வெறுஞ் சொற்கள் கலத் தல், ஜகத்ஜோதியான ரத்னங்களின் நடுவில் பரல் கற்களும், சந்தனத் தோப்பில் புல்லும் கலந்திருப்பதொக்கும். சாஸத்ர நிர்மிதமான ஞானப் பெருக்குள்ள பெரியார் யதாசாஸ்த்ரம் ஆசார்யாளுடைய ஸ்வரூபகுணக்ரு பாவைபவங்களில், மண்டியனுபவித்து ரஸித்தற்கும், அக்ஞன் ஈடுபடும் மாதிரிக்கும், வாசி விளங்கவேண்டியதும், அவசியமென்பதைத் தவிற அடியேன் இதில் கவந்துகொள்ள வேறு நியாயமில்லை. திருவெட் டெழுத்தை ஸ்மரித்திருக்கும் பெரியார்பக்கல், கம்பநாட்டாழ்வார் தனக் குள்ள ஈடுபாட்டை.—

“ நாராயணைய நமவென்னும் நன்னெஞ்சர்
பாராளும் பாதம் பணிந்தேத்து மாறறியேன்
காராருமேனிக் கருணைகாக்கடவுட்
காராதனம்என் அறியாமை யொன்றுமே.

யென்றுரைத்து விளக்கினர்.

உபஹிதாளான சேதனர்கள் எண்ணிறந்தார், இவ்விதம் கம்பர் செய்யும் ஆராதனத்துக்குப் பாத்ராளும், நன்னெஞ்சமும், பாராளும் பாதமும் உடையவர்களாகுமாறு ஒவ்வொரு நாளும் பாக்கியவந்தாளுக் குத் திருவெட்டெழுத்தை உபதேசித்தும், அதை த்யானித்து ஜபித்து, ஸாக்ஷாத்காரம் பெற்ற பலர்களாலும் நித்யஸேவிதராய் விளங்கும் ஸ்ரீ ஆசார்யன் வைபவங்கள் இன்னும் பல்லாயிரம்படி மேலாகி யிருத்த லாற் சொற்கடங்காதனவாம். வேதவாரியும், க்ருபைக் கடலும், தவத்தின் ஸ்வரூபமும், சித்தாந்த வடிவமுமாகித் திருவடியை அடைந்தவர்க்கெல் லாம் மஹாநுக்ரஹமும், சேதநாஜ்ஜீவனநிரதையுமுள்ள ஆசார்ய வர்ய திவ்ய பாதாள் வைபவத்தை யுன்னி, யுன்னி உள்ளடங்காமல் மற்றவ ரிடம் உரைக்கப்புகின்,

“ இருளுறுசிந்தை யேற்கும் இன்னருள் சுரந்தவீரன்
அருளும்நீ சேரின்ஒன்மூ அபயமும் அளிக்குமன்றி
மருளுறுபிறவி நோய்க்கு, மருந்துமாம் மாறிச்செல்லும்,
உருளுறுசகட வாழ்க்கை, ஒழித்து வீடளிக்குமன்றே.”

யென்று கம்பநாட்டாழ்வார் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் வைபவத்தை யருளிச்செய்ததே யன்றி வேறு விதமாய் உணர்தல் அறியேன்.

ஆசார்யன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

அழகிய சிங்கர் மாலை

[ஸ்ரீ. உ. வே. வி. டி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், தமிழ் வித்வான்]

சிங்கவேள் குன்றத் திருப்பதியில் வாழுநர
சிங்கவேள் செம்பொற் றிருவடிகள்—தங்கவே
ஆக்குமன்த் தெம்மான் அழகிய சிங்கர் புகழ்
வாக்குமன மெய்யே வரும்.

திருமகள் புல்கும் உரமுள பெருமான்
திருவடி மனமுற நிறுவும்
பெருமைகொள் தொழும்பர் மரபுநன் கோங்கப்
பேணிய திருநெறி வழியே
தருமமும் பொருளுமின்பமும் வழங்கித்
தன்கழல் வீடுதந் தருளும்
ஒரு பொருள் அடிமை அழகிய சிங்கர்
உயர்புகழ் பெருகுக உலகே. 1

மாறிரு வடியில் மனமுற நிறுத்தும்
மதமென விசிட்டவத் துவிதப்
பேறுறு மும்மைச் சித்தசித் தீசப்
பெரும் பொருள் பேசிய நெறியின்
ஆறுநன் குணர்ந்து மக்கள் பேரின்பம்
அடைவுற வருள் பணி பூண்ட
தேறுறு குரவர் அழகிய சிங்கர்
திருமர போங்குக வளர்ந்தே. 2

அரிதிருக் கழலி லாழ்பவர் வளர்த்த
அறநெறி முறையுற வளரப்
புரிதிருப் பணிகொள் குருகையர் பெருமான்
புண்ணிய மரபினை வளர்த்து
விரிபுகழ் புனைந்த வண்சடகோப
மெய்ப்பொருள் தருமுனிவழியே
தெரிவதற் கரிய பொருள்களை விளக்கும்
திருமர போங்குக சிறந்தே. 3

அத்தகு மரபில் அரிநெறி வளர்க்கும்
அரும்பணி பெறு முனிவரருள்
முத்தியி னியல்பை யுய்த்துணர்ந் துணர்த்தி
முழுத்தவப் பிழம்பென விளங்கும்

வித்தக முனிவர் திருநர சிங்க
வியன்பெயர் தாங்கிய விபுதர்
புத்தமு தனைய மொழியினர் அறத்தின்
புகழினை யளப்பது மரிதே. 4

திருமகள் தழுவு புயமுள விறைவன்
திருப்புகழ் வழுத்திய முகமும்
பெருமைகொள் அவன்றன் அருள்நெறி பிடித்துப்
பிரிவறு மனமுநன் கமைந்த
பெருமுனி வராம் வண்சட கோபப்
பெயருறு திருநர சிங்கர்
தருமமுங் கடவுள் பணிபுரி நெறியும்
தகுமென வழுத்துதும் உணர்ந்தே 5

வேறு

ஆதி வண்சட கோப முனீந்திரர்
அன்று தந்த நெறிமுறை பற்றியே
ஓதியோதி யுணர்ந்துள மெய்ந்நெறி
உய்த்துணர்ந்துரைத்துண்மை விளக்கிய
நாத னல்லருள் வாய்ந்த பெருந்தவர்
நாற்பத்தொன்றுங்குருவென வந்தவர்
வேத நூல்பயில் தேர்ச்சியும் வாழ்வையும்
மிக்கவன்போ டுரைத்து மகிழ்வமே. 6

தண்டமிழ்த் திருநாட்டினர் முன்செய்த
தக்கமெய்த்தவ நற்பயனென்னவே
தொண்டர் வாழ்திரு நாரணமாபுரம்
தோன்றியோங்கிய தொல்குடி யொன்றினில்
அண்டர் நாயகன் கோவிந்தன் நாமமே
ஆரப்பெற்ற வழுதினவுண்டலே
கண்டமெய்ம்மர பொன்றினில் வந்தவிக்
கடவுண் மாமுனி சீரைப்புகழ்வமே. 7

மாதவத்தினர் வாதூல கோத்திரம்
வந்த வந்தணர் கோபாலனுமமே
ஓதுகோபால ரங்கநாதப் பெயர்
உற்ற நற்றவர் மெய்த்தவப்பேறென
வேத மோதி விளங்கு குலத்தினில்
மிக்கலக்குமி பெற்றருள் செல்வமா

நாத னுமம் வழுத்த வடைந்தருள்
ராம பத்திர நாமமுடையரே. 8

நல்ல மெய்த்தவர் நாட்டிய நூனெறி
நாளு மோதி நிறுத்து முளத்தினர்
வெல்ல வல்ல தருக்கநன் னூல்களும்
வேத வந்தம் விளக்கிய நூல்களும்
சொல்ல நல்ல குரவர்கள் வாய்த்ததாற்
சொற்ற வண்ண முளத்தி லடைத்தனர்
மெல்ல மெல்ல வுணர்ந்து பிரபந்தமும்
மெய்ந்நெறித்தவர் செப்ப வுணர்ந்தனர். 9

மக்கள் மூவரை மங்கை யொருத்தியை
மணியின் செல்வியாம் குப்ஜவல்லிப்பெயர்
மிக்க சானகி பெற்று வளர்த்தருள்
மேவவைத்துத் துறவில் மனங்கொளீ இத்
தக்க மாதவர் வண்சட கோபர்
தவத்தின் மிக்க வரங்கநாதாரியர்
ஒக்க மாதவன் பாதுகைச் சேவகம்
உள்ளவாறு பயின்றவர்ச் சார்ந்தனர். 10

வேறு

சடகோப தேசிகர்பாற் சமாச்சிரயண மடைந்தனராய்
சடகோப ராமாநுஜத்தவ முனிபாற் பரிபாசம்
சடகோப மரபுநெறி தாம் வளர்க்கும் பணிபூண்டார்
சடகோப னருளுநெறி தாமடைந்தார் முறையுறவே. 11

துறவறத்தி னிலைப்பதற்குத் துணிபுபூண் டிருக்குமிவர்
அறநெறிக்க ணிலைத்த வுளத்தமைதியினை யறிந்தருளும்
துறவறத்தின் விளக்கமெனும் தூயமுனி மடத்தழைத்தே
அறநிலைக்கத் துறவருளி யாட்கொண்டார் இன்னவரை. 12

பாண்டிய நாட்டகமுள்ள பழம்பதிகள் பலவற்றுள்
ஈண்டிய மாப்புகழ் பூண்டே யெழில் நிறைந்திருப்பதியாம்
தூண்டரிய வொளிசான்ற துவரைமான் எனுந்தலத்தில்
வேண்டுதுற வடைந்தபுகழ் மிக்காரை வழுத்துதுமே. 13

அகோபிலநற் றிருமடத்தின் அதிபதியாம் பெருமை யொடும்
அகோபில நற்றிருப்பதிவாழ் அரியநர சிங்கனருள்

அகோபிலத்தே யிருந்து பெறு மமைதியினுல் உலகுபுகழ்
அகோபில தேசிக சீயர் ஆயினரிப் பெரியோரே. 14

பிறவியினைப் பெற்றோர்கள் பெருங்கல்வி பயில்வது நம்
அறநெறியை யுணர்வதுவும் அடக்கமெலா மமைவதுவும் [தால்
துறவறத்தின் பெருமையினைத் தூய்மையினைத் தெரிந்துரைத்
உறவதனை யடைவதுவும் உண்மை நெறி வளரவன்றே. 15

தென்னுட்டின் திருப்பதிகள் பலப்பலவும்
முறைப்படியேசென்று சென்றே
பொன்னுட்டும் மறுவுரத்துத் திருமாலின்
திருவருளைப் பொருந்த வோதி
என்னுட்டு கதிரவனுளி லங்குபவன்
திருவுருவின் இயல்பு காட்டி
நன்னுட்டினிலை விளக்கி மடாதிப ராய்
நாடனைத்தும் நடந்தா ரன்றே 16

திருமலையிற் புல்லணையில் வடவூரில் தையாற்றில்
சிறப்பு வாய்ந்த
குருவரர்தம் புகழ்விளங்கு துவரைமான்
திருப்பதியில் குறைவி லாத
திருமடங்கள் நன்கமைத்துத் திருப்பணியால்
தமதுபுகழ் சிறப்ப வைத்தே
ஒருபொழுது மவனருளை மறவாத பெருந்தவத்துக்
குரிமை பூண்டார். 17

திருக்குடந்தை யமுதனுக்குப் பொன்மயமாம்
திருவடியும் திருவ யிந்தை
இருக்குமொரு தேசிகர்க்கு வயிரமயத்
திருமண்காப் பெழிலு மாக்கி
உருக்குமுளத் தமர்காஞ்சி வரதனுக்குத்
திருமணிப்பூண் உவப்பிற் செய்து
விருப்பமுற வெவ்வுளமி ராகவனுக்
காழிசங்கம் விளங்க வைத்தார். 18

வீரையமர் திருமாற்குத் திருக்கவசம்
பொன் மணியால் விளங்க விட்டே
காரைவளர் பெருமாற்குந் திருமுடியாம்
பொற்பணியைக் களிப்பிற் செய்தே

நாரணன்றன்றிருவருளால் திருமடத்திற்
சூரிய நலம் நாடுதோறும்
ஏருறவே மூன்றரை நூறுயிரத்துக்
கமையும் வணம் இயற்றியிட்டார். 19

உடையவர் தந்தருளு நெறி வளர்ந்தோங்க
வகோபிலத்தினுரிமை மேவு
மடவதிபர் நிலைமையினினடிமையுளார்
மனங்களிக்க வழங்கும் வள்ளல்
மடனறவே மெய்ப் பொருளை விளக்குதிருப்
பணிபூண்ட வண்மைச்செல்வர்
புட விபிடை யறம் வளர்க்கு நரசிங்க
யதீந்திரர் தம் புகழேயோங்க. 20

வாழி

திருநர சிங்கன் திருக்கழல்கள் வாழி
திருவண் சடகோபத் திருமரபு வாழி
இருமையருள் திருமகளார் கழல்கள் வாழி
எண்ணமரிக்கென வமைத்த வடியார் வாழி
பெருமைபெறு மகோபிலத்துப் பெருமான் வாழ
பேசரிய மறையருளும் மெய்ம்மை வாழி
இருமொழியால் மறையருளும் குரவர் வாழி
இன்னுமொரு நூற்றாண்டின்றிங்கு வாழி. 21

(2)

ஸ்ரீ அழகிய சிங்கர் வைபவம்

வணக்கம்

பற்ப மெனத்திகழ் பைங்கழல் மேவிய
பல்லவ விரலழகும்
பாவன மாகிய பைந்துவ ராடை
பதிந்த மருங்கழகும்
மூப்புரி நூலொடு முன்கையிலே திகழ்
முக்கோல் பிடியழகும்
முன்னவர் ஓதிய மொழிகள் மொழிந்திடு
முறுவல் நிரைவழகும்
கற்பக மென்விழி கருணை பொழிந்திடு

கமல முகத்தழகும்
காரி சுதன்கழல் கம்பன் இருங்கழல்
கண்ணிய சிகையழகும்
எப்பொழுதும்யதி ராஜன் வடிவழ
கென்னித யத்துளதால்
இல்லை இனிப்பிறப் பில்லை யெனக்கெதிர்
சொல்லை எனக்கிடரே.

பாரதநாட்டின் மதம்

பழம் பெருமைகள் மலிந்த இந்தப் பாரத நாட்டில் அநாதியாக நிலை பெற்றுள்ள மதங்கள் பல. அவற்றுள் வேத வேதாந்தங்களையும், இதிகாச புராணுதிகளையும் சான்றுகக் கொண்டு வடித்தெடுத்த மதம் ஸ்ரீ வைஷ்ணவ சமயமே யாகும். அறிஞர் ஒத்துக்கொள்ளக் கூடிய பல வட மொழித் தென்மொழி நூல்களை திருமால் சமயத்தின் மகிமையை எடுத்து விரித்து விளக்குவதால் நாம் இது பற்றி ஆராயவேண்டிய அவசிய மில்லை.

பகவான் கருணை

ஸ்ரீ வைகுண்ட பதியாகிய பகவான் தசாவதாரம் எடுத்தும், ஹயக் ரீவனுகத் தோன்றியும், கீதாசாரியனுகப் பிறந்தும், வேதங்களையும் கீதை யையும் சாஸ்திரங்களையும் இயற்றியும், மக்கள் அனைவரையும் நல்வழிப் படுத்த முடியவில்லை. தன் கைக்கு வராத மானிடரை உய்விக்கக் கருதி ஆழ்வார் ஆதிகளை அவதரிப்பித்து, அவர்கள் அருளிச்செயல்களாகிய திவ்யப் பிரபந்தங்களையும் வெளியிட்டுப் புலப்படுத்தினேம், இதிலும் மக்கள் ஆன்ம உணர்வின்றி உடல் நலம் தேடுபவராக உள்ளார். நாதமுனிகள், இராமாநுஜர், வேதாந்த தேசிகன் என்ற ஆசார்ய சிரேஷ்டர்களை அவத ரிப்பித்து ஸ்ரீ பாஷ்யம் கீதாபாஷ்யம், பகவத்விஷயம் முதலிய தெளிவுரை களை வகுத்தும் ஞானமும் பக்தியும் இந்த யுகத்தில் பெறுபவரைக் கண்டி லோம், இனி என் செய்வோம், சேதநர்களை ரக்ஷிக்கும் மார்க்கம் எங் ஙனம் என்று ஆழ யோசித்தான்.

தென்னாட்டின் மகிமை

பூலோக வைகுண்டமாகிய அரங்கமா நகருள் ஸ்ரீ ரங்கநாதன் தென் திசை இலங்கை நோக்கி அரவணையிற் பள்ளிகொண்ட நாள்தொட்டுத் தென்னுடு புண்ணிய பூமியாக விளங்குகின்றது. தாமிர பர்ணி தீரத்தில் ஆழ்வார் திருநகரியில் வேதம் தமிழ்செய்த மாறன்—சடகோபன்—நம் மாழ்வார் அவதரித்த நாள் முதல் கன்னிநாடு சான்றோர்க்குப் பிறப்பிட மாய்ப் பிரகாசிக்கின்றது. ஔவையார் கூறிய 'தொண்டை நன்னு

சான்றோர் உடைத்து, என்னும் பழமொழி பழமொழியாகி, பாண்டி நன்னாடு பல அறிஞரையும் ஆழ்வார்களையும் ஆசார்யர்களையும் உடையது என்னும் புது மொழிக்கு இலக்காக இலகுகின்றது. இதனால் தென்னாட்டில் திருமால் சமயம் பிரபலம் பெற்றிருந்த நிலைமை,

'அச்சுதன் தன்னை ஞானவிதி விழையாமே
மேவித்தொழும் அடியாரும் பகவரும் மிக்கது உலகே'

என்ற சான்றோர் மொழியால் தெளிவாகின்றது.

ஆழ்வார் ஆசாரியர்கள்

ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தின்படி இம்மதப் பிரவர்த்தகர்களான பெரியோர்கள் இருவகைப்படுவர். அவர்கள் ஆழ்வார்கள், ஆசார்யர்கள் என்பர். ஆழ்வார்கள் அவதார புருஷர்களாகவும், மூல புருஷர்களாகவும் பிரகாசிக்கிறவர்கள், ஆசார்யரோ—ஆழ்வார்கட்குப் பிற்காலத்தே தோன்றி ஆழ்வார் அருளிச் செயல்களையும் மாக்கத்தையும் பின்பற்றி ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்தை நாடெங்கும் பரப்பி மக்களை உய்விக்கும் உயர்ந்தோர். ஆழ்வார்களில் தலைவர் நம்மாழ்வார். ஆசார்யர்களில் தலைவர் நாதமுனிகள். ஸ்ரீமந் நாதமுனிகள் மஹா வித்வானாகவும் யோகநிஷ்டாபராகவும் பிரகாசித்தார். சடகோபர் இன்னருளால் இகலோக ஞானமும், பரலோக ஞானமும் உணர்ந்தார் எம்பெருமான் நான் கோயில் கொண்டிருக்கும் க்ஷேத்திரங்களில் நம்மாழ்வாருடைய பாசுரங்களை தேவகீதத்தில் பாடக் கேட்பதே எனக்கு அமிருதமாகும் என்று நாதமுனிகளுக்குக் கட்டளை யிட்டார். அதன்படி எல்லாத் திவ்ய தேசங்களிலும் திவ்யப் பிரபந்த பாராயணம், தேவகீதத்தில் இசையோடு பாடி நடைபெறும்படி திட்டம் செய்தார்

ஸ்ரீராமானுஜரும் தேசிகரும்

சுமார் ஒருநூறு வருடங்களுக்குப் பின்னர் நாதமுனிகள் பரம்பரையில் ஸ்ரீராமானுஜர் அவதரித்தார். இவரை வரதராஜர் யதீந்திரர் என்றும், ஸ்ரீரங்கநாதர் உடையவர் என்றும், திருக்கோட்டியூர் நம்பிகள் எம்பெருமானார் என்றும் சரஸ்வதி தேவி பாஷ்யகாரர் என்றும் அழைத்தனர். இவ்வாசாரிய சிரேஷ்டரின் இடைவிடாத் தொண்டால் ஸ்ரீ வைஷ்ணவ மதம் இராமானுஜ மதம் என்றே வழங்கப்பெறும் பாக்கியம்பெற்றது. இம்மகான் பரம்பரையில் சுமார் இருநூறு ஆண்டுகளுக்குப்பின் தூப்புல் வேதாந்த தேசிகன் அவதரித்து விசிஷ்டாத்வைத மதத்தைப் பலப்படுத்திப் பிரபலப்படுத்தினர். இவ்வாறு பகவான் அருளால் பேராசிரியர் காலத்துப் பிரகாசம் பெற்றும், பேராசிரியர் இல்லாத காலத்துப் பிரகாசம் குறைந்தும் ஸ்ரீ வைஷ்ணவ மதம் வழங்கிவரலாயிற்று. இதனை உணர்ந்த எம்பெருமான் என்றும் ஒரே நிலையில் ஸ்ரீ வைஷ்ணவ மதம் உலகில் பிரகாசிக்கவேண்டும் என்று சங்கற்பித்தான்.

ஆதிவண் சடகோபர் அவதாரம்

இந்த சங்கற்பத்தால் ஆசாரிய பரம்பரையில் நம்மாழ்வாரின் அவதாரமாக இற்றைக்கு 400 வருஷங்களுக்கு முன் ஆதிவண் சடகோபமாமுனி அவதரித்தார். இவர் அகோபிலத் திருப்பதியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மனே ஆராதித்து அவர் ஆஞ்ஞையால் பெருமாளைக் கூடவே எழுந்தருளப்பண்ணி சீரூர், பேரூர் முதலிய எல்லா இடங்களுக்கும் சஞ்சரித்து பண்டித பாமர சாமானியர்களுக்கும் பெருமாள் சேவை செய்வித்து, பரபக்தி ஞான வைராக்கிய சம்பத்தை வளர்த்து, சேதனகோடிகளை கிருதார்த்தராக்கி ஆசார்ய பீடத்தை நிரந்தரமாக நடத்திவர சட்டதிட்டங்களை ஏற்படுத்தினர். கிராமந்தோறும் பெருமாளுடன் எழுந்தருளிச், சீடர்களுக்கு மந்திரோபதேசம், பஞ்சஸம்ஸ்காரம், பரந்யாசம், கிரந்த காலக்ஷேபங்கள், பகவதாராதனம் நடத்தி அங்கங்குள்ள சேதனர்களை சன்மார்க்கத்தில் பிரவேசிக்கச்செய்து பக்தி ஞான வைராக்கியங்களை வளர்த்து ஆன்மாவின் ஜன்ம தேசமாகிய பரமபதத்தை அடையச் செய்யவேண்டும் என்ற கொள்கையை நிலை நாட்டினர்.

இக்காலத்தில் மானிடர்கள் பக்தியோகாநுஷ்டானங்களுக்கு அவசியமான அறிவுபெறுதிருக்கிறார்; அளவிற் குறைந்த வாழ்நாள் பெற்றிருக்கிறார்கள்; 'கல்வி கரையில; கற்பவர் நாள் சில; மெல்ல நினைக்கிற் பிணிபல' பெற்றிருக்கிறார்கள். பெரியோர் கூறும் அறவுரைகளை மதியாது இழந்து பெறவேண்டிய பேற்றைப் பெறுதவராயுள்ளார். ஆகையால் உலக நூல் கற்று அறிவுநூல் கல்லாது ஆன்ம லாபத்தை இழந்த சேதநர்களை எவ்வாறு ஆட்கொண்டு பகவானின் மலரடியைத் தொழுவைக்கக் கூடும் என்று ஆலோசித்து சரணாகதியே மானிடர் கடைத்தேற இலகுவான உபாயமாகும் என்று தீர்மானித்துச் சஞ்சாரம் செய்யும் இடம் எங்கும் பெருமாள் சேவை செய்யும் சேவார்த்திகளுக்கு எல்லாம் ஸ்ரீ வைஷ்ணவ சம்பத்தைப் பெருக்கி வந்தார். பஞ்சஸம்ஸ்காரங்களும், மந்திரோப தேசங்களும் பரந்யாசமும், செய்வித்து ஆட்கொண்டார். இவ்விதமாகப் பாரத பூமி முழுவதும் பூப்பிரதக்ஷணம் செய்து ஸ்ரீ வைஷ்ணவ மதத்தையாவரும் அநுஷ்டிக்கும்படி உபதேசித்து உலக குரு என்ற பிரசித்தியை அடைந்தார்.

மனிதரை ஆட்கொள்ள அரும்பாடு பட்டு பகவத் கைங்கர்யமும், பாகவத கோஷ்டி லாபமும் பெற்ற இந்த ஆதிவண் சடகோப முனீந்திரரால் ஸ்தாபிக்கப்பெற்ற 'அகோபிலமடம்' என்ற ஸ்தாபனம் இன்று வரை லக்ஷ்மீ நரஸிம்மன் காரணமில்லாத கருணையில் மங்களகரமாய் நித்திய கல்யாண வைபவங்களோடு, சிஷ்யகோடிகளின் அநுக்கிரகத்தின் பொருட்டு பிரகாசித்து வருகிறது. இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸ்தாபனத்தின்

கீழ் இந்தியாமுழுவதிலும் பலகோடி சிஷ்யர்களும் ஏராளமான பூஸ்திதி களும் உண்டு.

பல நூற்றாண்டுகளாகப் பிரகாசித்து வரும் விசிஷ்டாத்வைத மதஸ் தாபனமாகிய அகோபிலமடம் ஆஸ்தானத்தில் பக்தி ஞான வைராக்ய சம்பந்நராகிய 'ஸ்ரீமத் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ம சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் துந்துபி வருஷம் தைமீ 4ந்தேதி புதன்கிழமை உத்தராட நக்ஷத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் 41வது பட்டம் பெற்றார். சென்ற மார்கழி மாதம் பூரட்டாதியில் எண்பத்து மூன்று திரு நக்ஷத்திரம் நிறைந்து எண்பத்து நாலாவது திருநக்ஷத்திரம் தொடங்கப் பெற்றார். இத்திருநாளை ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் சிஷ்ய கோடிகள் மகா வைபவத்துடன் விமரிசை யாகக் கொண்டாடினர்கள். சதாபிஷேக வைபவம் பெற்று ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மனை ஆராதித்து சிஷ்ய கோடிகளுக்கு அநுக்ரகித்துக் கொண்டிருக் கும் இம்மஹா யதீந்திரரின் பூர்வாச்ரம வைபவங்களும், ஆஸ்தானத்துக்கு எழுந்தருளியதும், பட்டம் பெற்ற பிறகு நிகழ்த்திய கைங்கர்யங்களும் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸௌலப்ய ஸௌசீல்யாதி குணதிசயங்களும் அநுக்ர பாத்திரர்களாகிய அடியார்களுக்குப் பெருவிருந்தாகும்.

பூர்வாச்சிரம வைபவம்.

அறிஞரும் பக்தரும் யோகிகளும் மதாசாரியர்களும் மடாதிபதிகளும் பிறந்து வளர்ந்த நாடே சீர் பெற்ற நாடென்று சிறப்பாகப் புகழப்படும். நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் நம்மாழ்வாரையும் இந் நூற்றாண்டில் அகோபில மடாதிபதிகளாய்ப் பிரசித்தி பெற்ற இரு அழகிய சிங்கர்களை யும் பிறப்பித்த பாக்கியம் பெற்ற நாடு எது? அது திருநெல்வேலி ஜில் லாவேவாயாகும். பொருனை பெருக்கெடுத்துப் பாயும் புண்ணிய நாடாகும். சேரன்மாதேவி தாலுகாவில் தாமிரபர்ணி நதிக்கரையில் கன்னடியன்கால் பாசன வசதி பெற்ற காரைக் குரிச்சி என்ற சிறு அக்கிரஹாரம் உள்ளது. இச்சிற்றூர் ஸ்ரீ பெரும்பூதூரையும், சீரார் தூப்புலையும் விடப் பெருமை பெற்றுவிட்டது. இவ்விரண்டும் உலகிற்கு உதவிய ஒவ்வோரு ஆசாரியர் களுக்கே பிறப்பிடமாகும் மாதவம் பெற்றன. காரைக் குரிச்சியோ இரு அழகிய சிங்கர்களுக்குத் தாயகமாக அமைந்து வாழ்வுங்கு பெரும்புகழ் படைத்துள்ளது. இது இரட்டிப்புப் பெருமைக்கே காரணமாகும். இவ் வூரில் மூத்தீ வளர்க்கும் ஸ்ரீ வைஷ்ணவ மறையவரும் வாதூல கோத்திர திலகரும் ஆகிய ஸ்ரீ ரங்காசாரியார்க்கும் லக்ஷ்மீ தேவிக்கும் தவப்ப யனாய் ஆநந்த வருஷம் மார்கழியில் பூரட்டாதி நக்ஷத்திரத்தில் 'ராம பத்திரன்' என்னும் பிள்ளைத் திருநாமத்துடன் அவதரித்தார். இம்மரபி னர் கோபால தாசர்களாதலின் 'கோபால' என்ற பட்டப் பெயரும் இயற்

கையில் உடையவர்கள். ஆதலின் இந்த ஸ்வாமி திருநாமம் கோபால. ராமபத்திராசாரியார் என்று பிற்காலத்து விளங்கியது.

இந்த ஸ்வாமியின் மாதாவாகிய இலக்குமியம்மாள் உருவும், திருவும், வறியார் மாட்டருளும், விருந்தினரை உபசரித்தலும், துறந்தார்ப் பேணலும், அட்டில் தொழில் வன்மையும, ஒப்புரவு செய்தலும், நாயகனேயே தெய்வமாகத் தொழுதெழும் குல ஒழுக்கமும் பூண்ட உத்தம பத்தினி. பிறந்த குலம் புகுந்த குலம் ஆகிய இரு குலத்துக்கும் புகழ்தேடும் புண்ணியவதி. பிதாவாகிய ஸ்ரீ ரங்காசாரியார் ஸ்வாமியோ ஞான பக்தி வைராக்ய சம்பன்னர். பிராதஸ்நானம், சூரியன் உதிக்குமுன் உபஸ்தானம் அக்கினிஹோத்திரம், ஔபாஸனம், பெருமாள் ஆராதனம் முதலிய நற் கருமங்களை நல் விருப்புடன் காலத்திற் செய்வர். இராமாயண பாகவத பாராயணம் நாடோறும் நிகழ்த்தும் பாகவதர். உத்தமோத்தமர்களாகிய இரு பெருங்குவரும் ஏக புத்திரனாகிய ராம பத்திரன், அறிவிலும் நடையிலும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவதைக் கண்டு ஈன்ற பொழுதினும் பெரிதும் உவந்து இன்புறுவார்.

ராமபத்திரன், சாஸ்திரோக்தமான வயதில் உபநயனம் செய்விக்கப் பெற்று வேதாத்யயனத்திலும் சாஸ்திர பாடத்திலும் ஏக சந்தக்கிராஹியாக விளங்குதைக் கண்ட குருவாகிய ஸ்ரீ ரங்காசாரியார் அளவிலா மகிழ்ச்சியுறுவர். பெற்றோரைக் காட்டிலும் உற்றாரும் உறவினரும் மற்றோரும் ராம பத்திரன் சாதுர்யத்தையும் அடக்கத்தையும் கண்டு பெரிதும் வியந்து பேசுவார். வித்வான் வரதாசாரியார் ஸ்வாமியிடத்திலும், வித்வான் ராம பத்ராசாரியார் ஸ்வாமியிடத்திலும் காவ்ய, நாடக, அலங்காரங்களும், வியாகரணதர்க்க பாடங்களும், வேதாந்த தேசிகர் சூக்திகளும் ஸ்ரீ பாஷ்யமும், பகவத் விஷயமும் காலக்ஷேபம் செய்து ராம பத்திரர் வித்யாபாரங்கதராய் நல்லொழுக்கக் கடலாய் விளங்கினர். இக் காலத்தில் ஸ்ரீ அகோபில மடம் 33-வது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ சடகோப யதீந்திர மஹா தேசிகனிடம் சமாச்ரயணமும் மந்திரோபதேசங்களும் பெற்றார். அறிவு, திரு ஆற்றல் பெற்று நற்குணக்குன்றாய் ஸதாசார சம்பந்நராய் விளங்குகின்ற கோபால ராமபத்திராசாரியாருக்கு குப்ஜவல்லி என்ற ஜானகி அம்மாள் வாழ்க்கைத் துணையாய், இல்லறத்துணையாய், பகவத் பாகவத கைங்கர்ய தர்ம சாரிணியாய் வாய்த்தாள். சீதா ராமனைப் போல் ஜானகி ராமபத்திரராக ராமபத்திரர் விளங்கினர்.

'இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு'

என்ற திருவள்ளுவரின் பொய்யாமொழி, வித்யாநிதியாகிய ராமபத்திரா



ஸ்ரீ அழகியசிங்கரின் பூர்வாச்ரமம்.

சாரியர் இல் வாழ்க்கையில் லகூஷ் பிரபுவாயும் விளங்கியதால் இவர் விஷயத்தில் சாமான்ய வசனமாகி விட்டது. வைதிக வாழ்வில் ஒரு சிறிதும் குறைவின்றி வாழ்வு நடத்தியவர். லௌகிகத் துறையிலும் இணையற்ற திறமை பெற்று வாழ்ந்தார். இருபத்தொன்பதாவது வயதில் பூர் அகோபில மடம் மூப்பத்துநான்காவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த அத்திப்பட்டு அழகிய சிங்கர் என்ற ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்திர மஹா தேசிகனிடம் பரஸமர்ப்பணம் செய்துகொண்டு ஆஸ்தானத்திலேயே சிலமாதங்கள் வசித்து, ஸ்ரீ பாஷ்யம், பகவத் விஷயம் முதலிய கிரந்த காலக்ஷேபங்கள் செய்து ஆசாரியரின் அந்தரங்க அநுக்கிரகத்தையும் பெற்றார்.

தினசரிவாழ்க்கை

அதிகாலையில் எழுந்து, ஸ்நான அநுஷ்டானங்களை முடித்து, அருமேணிய காலத்தில் பன்னிரு திருநாமமும் தரித்து, திருப்பவித்திர மாலையுடன் அர்க்கியம் வழங்கும் காட்சி கண்கண்டு களிக்கத் தகுந்தது. பிறகு கிருஷ்ண ஜினத்து வீற்றிருந்து ஜபிக்கும் முறை எண்ணத்தகுந்தது. பின்னர் அபிகமன ஆராதனத்தைச் செய்து, பெருமாள் சந்நிதியில் தியானிக்கு முறையும் தம்பதிகள் இருவரும் சேவிக்கும் முறையும் பார்ப்பவரைப் பரவசப்படுத்தாமல் இராது. அநுஷ்டானங்களை முடித்துக் குடும்ப காரியங்களைக் காலை $7\frac{1}{2}$ மணிக்குமேல் $8\frac{1}{2}$ மணிக்குள் கவனிக்கும் முறை ராஜதந்திரிகளைத் தோற்கடிக்கும். $8\frac{1}{2}$ மணிக்கு மேல் பாரதப் பிரஸங்கம் கேட்கத் தகுந்தது. 10 மணிக்கு மேல் மாத்யாந்நிக ஸ்நாநத்துக்கு திருப்பூக்குடலை தோளில் சாத்தி எழுந்தருளும் நேர்த்தி இயம்ப முடியாதது. மாத்யாந்நிக அநுஷ்டானங்களை முடித்துத் திருமாளிகைக்கு எழுந்தருளி நவவித பக்தியுடன் பெரிய பெருமாளையும் ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மனையும் அர்ச்சித்து ஆராதித்து வந்தனம் செய்யும் முறை நேத்திராநந்தமானது. பெருமாள் கண்டருளிய தளிகைகளை அமுது செய்து, சிறிது இளைப்பாறி, இராமாயண பாராயணமும் வேதாந்த பாட போதனையும் செய்யும் முறை கர்ணமித்தமாயிருக்கும். மாலை $4\frac{1}{2}$ மணிக்கு மேல் 6 மணிவரை குடும்ப காரியங்களைக் கவனிக்க அவகாசம் உண்டு. இடையிடையே அகத்திலுள்ள பசுவைப் பரிபாலிக்கும் முறை குறிக்கத் தகுந்தது. காணுமல் கோணுமல் கண்டு அர்க்கியம் கொடுக்கும் முறை தெய்வீகத் தன்மையைத் தெளிவிக்கும். மாலைக் கடன்களை முடித்த பிறகு பாகவத பாராயணம் செய்யும் முறை அந்த வீதிக்கே அலங்காரமாயிருக்கும். இவ்வாறே எப்பொழுதும் திருநாராயணன் திருவடிணையக் காலம் பெறச் சிந்தித்துக் காலக்ஷேபம் செய்வார்.

"கண்ணு நான்முகனைப் படைத்தானே
காரணு கரியாய் அடியேன்நான்

உண்ணுநாள் பசியாவ தொன்றில்லை
ஓவாதே நமோ நாரண வென்று
எண்ணு நாளும் இருக்கு எசுச்சாமம்
வேத நாண்மலர் கொண்டுனை பாதம்
நண்ணு நாளனை தத்துறு மாகில்
அன்றெனக்கனை பட்டினி நாளே!"

என்னும் பாசுர அநுசந்தானமே தாரகமாகக் கொண்டு இல்வாழ்க்கையை நடத்தினர். இவ்வாழ்க்கைத் துணைவியோ பின்தூங்கி முன்னெழுந்து பெருமாள் காரியத்தில் செய்ய வேண்டிய சிஷ்ரூஷைகளைத் தவக்கமின்றி உவக்கும்படி செய்து அறத்துணையாக அமர்ந்திருந்தாள்.

மங்களகரமாகிய இல்லற வாழ்க்கையில் விலமதிக்கமுடியாத அணிகலமென்று சொல்லக்கூடிய நன்மக்கட் பேற்றை அந்யோந்ய தம்பதிகள் இருவரும் பெற்றிருக்கின்றார். இலக்குமி என்ற திருமாமகளும், ரெங்காசாரியர், கோபாலாசாரியர், ஸ்ரீநிவாஸாசாரியர் என்ற மூன்று புத்திர ரத்நங்களும், 'இவர் தந்தை இவர்களைப் பெறுவதற்கு என்ன நோன்புநோற்றார்' என்னும் சொல்லை நிகழ்த்தும் நல்லொழுக்க நற்குண நற்சிந்தை யுள்ளவர்களாக விளங்குகின்றார்கள். பொருட் செல்வமும், கல்விச் செல்வமும், மக்கட் செல்வமும், அருட் செல்வமும், வாக்குச் செல்வமும், எல்லாச் செல்வமும் நிறைந்த ஆசார்ய குடும்பம், திருமாலின் திருவருள் பெற்றுப் பல்லாண்டு வாழ நாம் பல்லாண்டு பாடுவோம். இந்த ஸ்வாமியிடம் வித்யாப்யாசம் செய்தவர்கள், வங்கிபுரம் வித்வான் வெங்கடராமாசாரியரும், குமாரர்கள் மூவரும் மற்றையவர்களுமாவர். இல்லறம் பெரும் பேறுபெற்ற கோபாலராமபத்திராசாரியார் ஸ்வாமி எப்பொழுதும்,

"பறவை யேறு பரம்புருடா நீ என்னைக் கைக்கொண்டபின்
பிறவி யென்னும் கடலும் வற்றிப் பெரும்பதம் ஆகின்றதால்
இறவு செய்யும் பாவக்காடு தீக்கொளீஇ வேகின்றதால்
அறிவை யென்னும் அமுதவாறு தலைப்பற்றி வாய்க்கொண்டதே!"

என்னும் இப்பாசுரத்தை அநுசந்தித்துக் கொண்டேயிருப்பர். இவ்வாறு அநுசந்தித்து வந்ததன் பயனாக துந்துபி வரு ஐ மீ 4 உ புதன்கிழமை உத்தராட நக்ஷத்திரத்தில் ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மன் அநுக்கிரஹத்தால், ஸ்ரீ வைஷ்ணவ சமூகத்தார் செய்த தவப்பயனால் மதுரையை அடுத்த துவரைமானில் ஸ்ரீ அகோபில மடம் ஆஸ்தானத்தில் 41-வது பட்டம் ஏற்று ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ம சடகோபயதீந்திர மஹாதேசிகன் என்ற ஆசார்ய பீடத்தில் ஏறி இன்றளவும் சிஷ்யகோடிகளை அநுக்கிரகம் செய்துவருகிறார்

தென்கோடியில் தோன்றிய கதிர் உலகம்முழுவதும் ஆசாரியராகப் பிரகாசிக்கும் பேறுகிட்டியது. மணமுள்ள பொன்மலர்போலவும், அழகுள்ள சுவர்ண குடம் போலவும், ஸர்வஜன யோக்கியமான ஸர்வாதிகாரமான ஞானபக்தி வைராக்கியங்களை வளர்க்கும் செவிக்கினிய செஞ் சொற்களை மந்திரமாகவும், கிரந்த காலக்ஷேபங்களாகவும், உபதேசமாகவும், சரணாகதியாகவும், ஹிதமாகவும், மிதமாகவும், புன்முறுவலுடனும், சிஷ்யகோடிகளுக்கு அருளிச்செய்து எழுந்தருளியிருக்கிறார். ஆசாரிய பீடத்தில் எழுந்தருளிய அன்று ஸேவார்த்திகளுக்கும் சிஷ்யகோடிகளுக்கும் ஏற்பட்ட மனம் நிரம்பிய ஆநந்தம் அளவிடத்தரமன்று. ஆஸ்தானம் அருளிய ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகருக்கு சாஸ்திரோக்தப்படி வேதபாராயணாதி கைங்கர்யங்களைச் செய்து முடித்து துவரைமானில் பிருந்தாவனம் ஸ்தாபித்து, பிரதிஷ்டை செய்து, நித்யோத்ஸவமும், திருநக்ஷத்திர உற்சவமும் நன்கு நடைபெற ஏற்பாடு செய்து சஞ்சாரம் செய்யத் தொடங்கினார்.

பக்த கோடிகள், பட்டி மேய்ந்து கட்டுண்டு உழலாமல் திருவஷ்டாக்ஷர உபதேசமும், முன் அழகிய சிங்கர்களால் பரம்பரையாக ஸம்ஸ்கரித்து வருகிற சங்காழியைக் கொண்டு பஞ்சஸம்ஸ்காரமும், ஸ்ரீ பாஷ்யம், ரஹஸ்ய த்ரயசாரம், கீதா பாஷ்யம், பகவத் விஷயம், முதலிய கிரந்த காலக்ஷேபங்களும், பிறவிப் பிணிதீரப் பணிந்தவர்களுக்குப் பரகதியைத் தந்தருளும் பர சமர்ப்பணமும் செய்தருளிச் சிற்றின்பம் பெற்ற சிறுமாமனிதனைப் பேரின்ப வெள்ளத்தில் திளைக்கும்படி செய்வதற்காகத் திருக்குறுங்குடி முதல் திருவேங்கடம் வரையுள்ள எம்பெருமான் கோயில் கொண்டருளிய எல்லாத் திவ்ய தேசங்களிலும் எழுந்தருளி அங்கங்கு வரந்தந்தருளுகிற எம்பெருமான்களை மங்களாசாசனம் செய்தருளி, ஸ்ரீ பாஷ்யகாரர் அவலம்பித்த இராமாநுஜ சித்தாந்தத்தைப் பரிஷ்கரித்தருளிய ஸ்ரீ ஆதிவண் சடகோப மஹாதேசிகன் அடிச்சுவட்டைப் பின் பற்றி எங்கும் கோஷித்துக் குதூகலப்படுத்திப் பிரவசனம் செய்துவருகிறார்.

இதுவரை பதினைந்து சாதுர்மாஸ்யங்களை வீரவநல்லூர், மாணமதுரை, திருப்பராய்த்துறை, நெடுந்தெரு, மதுராந்தகம், ஸ்ரீ ரங்கம் ஆகிய திவ்ய தேசங்களில் நடத்திவைத்து விசேஷ வைபவம் பெற்றும் பிரகாசிக்கிறார்.

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் கைங்கர்யத்தை அநவரதமும் அவன் உகக்கும் வண்ணம் அவன் ஆணையின்படி விநயத்துடன் ஆராதித்து வரும் பக்தி, அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகளாலும் புகழுந் தரத்ததன்று. ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் மூகோல்லாசத்தைப் பரிபூர்ணமாகப் பெற்று நித்ய சூரிகளைப் போல் ஆநந்த ஹ்ருதயராய், வேதமார்க்க பிரதிஷ்டாபநாசார்யராய், பரம ஹம்ச பரிவ்ராஜகாசார்யராய், ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ராய், உபய

வேதாந்தாசார்யராய் பகவத் ராமாநுஜ சித்தாந்த நிர்த்தாரணராய் விளங்குகிறார்.

சஞ்சாரம் செய்து வரும்பொழுது ஒவ்வொரு திவ்ய தேசத்து எம்பெருமானையும் ஆராதித்து, ஸேவித்து மங்களாசாசனம் செய்து வரும் நேர்த்தியை நேரிற் கண்டே ஆநந்திக்கவேண்டும். ஒவ்வொரு எம்பெருமானுக்கும பீதாம்பரமும், திருவாபரணமும் புதிது புதிதாகச் செய்து சாத்தி ஆநந்திக்கும் அழகு சொல்லுந் தரத்ததன்று. அக்கைங்கர்யங்களில் முக்கியமான சிலவற்றை மஹா ஜனங்கள் அறியவேண்டுவது அவசியம்: பெருமாள் கோவில் வரதராஜனுக்கு தங்கக் கிண்ணிகளும், திருவாபரணமும், ஓராயிர ரூபாய்க்கு மேலும், திருவகீந்திரபுரம் தேசிகனுக்கு வஜ்ரத் திருமண்காப்பு ரூபாய் ஈராயிரம் வரையிலும், திருக்குடந்தை ஆராவமுதனுக்குத் தங்கத் திருவடிகள் ரூ. 1500 வரையிலும், புள்ளம் பூதங்குடி ராமனுக்குக் கவசம் ஓராயிரம் ரூபாய் வரையிலும், திருவெவ்வுளூர் ராகவனுக்குத் தங்கத்தில் கல்லிழைத்த சங்க சக்கரங்கள் ரூபாய் நாலாயிரம் வரையிலும், வீரவநல்லூர்ப் பெருமாளுக்குக் கவசமும் திருவாபரணமும் ஓராயிரம் ரூபாய் வரையிலும், காரைக்குரிச்சி, ஆதிவண் சடகோப மகாதேசிகனுக்கும், வரதனுக்கும், கிருஷ்ணனுக்கும் கிரீடங்கள், திருவாபரணங்கள் ரூபாய் ஓராயிரம் வரையிலும், சந்நிதி ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மனுக்கு தங்க சடாரி ரூபாய் ஓராயிரம் வரையிலும், ஸ்ரீ அகோபிலம் நரஸிம்மனுக்கு ஒரு லக்ஷ ரூபாய் வரையிலும், திருப்பணி செய்து எம்பெருமான் கிருபைக்குப் பாத்திரராக எழுந்தருளியிருக்கிறார்.

மேலும் திருப்பதித் திருமலையில் திருவேங்கடநாதன் சந்நிதிக்கு சமீபத்தில் சுமார் ரூபாய் ஐம்பதினாயிரம் செலவு செய்து, திருமடம் கட்டி, ஸ்ரீ ஆதிவண் சடகோப மஹாதேசிகன் பிரதிஷ்டை சமீபத்தில் நடந்தது அடியார்கள் அனைவரும் அறிந்த விஷயம். திருப்புல்லாணிக்கு ரூபாய் மூவாயிரம் வரையிலும், தையாறுக்கு ரூபாய் ஆயிரத்தைந்நூறு வரையிலும் வடுவூருக்கு ரூபாய் ஆயிரம் வரையிலும், துவரிமான் பிருந்தாவனத்துக்கு ரூபாய் பதினாயிரம் வரையிலும், செலவு செய்து மடங் கட்டிப் பரிஷ்காரம் செய்து, ஆதிவண் சடகோப மஹாதேசிகன் உற்சவங்களை நடத்திவரத் திட்டம் செய்திருக்கிறார். இக்கைங்கர்யங்கள் குறிப்பிடத் தகுந்தவை. லக்ஷ்மீநரஸிம்மனுக்குச் சொந்தமான எல்லா இடங்களிலும் உள்ள மடங்களிலும் ஆதிவண் சடகோப மஹாதேசிகனுக்கு ஆராதனங்களும் ததீயாராதனங்களும் விமரிசையாக நடந்துவர எல்லாவித ஏற்பாடுகளும் செய்தருளியிருக்கிறார்.

மேலும் லக்ஷ்மீ நரம்ஹிம்மனுக்கு இந்த ஸ்வாமி ஆஸ்தானத்துக்கு எழுந்தருளிய பிறகு வந்து குவிந்த வருவாயைக் கொண்டு தாமிரபர்ணி

பாசனத்தில் வேலங்குளம் கிராமத்தை ஒன்றரை லக்ஷத்துக்கு கிரயம் வாங்கியும், நெடுந்தெரு, மன்னர்குடி, பெருக வாழ்ந்தான், வீரவநல்லூர், அடைச்சாணி முதலிய கிராமங்களில் சுமார் இரண்டு லக்ஷம் ரூபாய்வரை நிலம் கிரயம் வாங்கியும் இந்த மடத்துக்கு பூஸ்திதி சேர்த்திருக்கிறார்:

ஸந்நிதியில் தினந்தோறும் அதிகாலையில் மூன்று மணிக்குக் கண் விழித்து, ஸ்நாநாநுஷ்டானங்களை முடித்து, திருந்திய பன்னிரு நாமங்களுடனும், முக்கோலுடனும் சிஷ்யர்களின் விருதாவளிகளுடனும், காலை 6 மணிக்கு ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் அபிகமன ஆராதனத்துக்கு எழுந்தருளும் நேர்த்தி காணக் காணத் தெவிட்டாது. பெருமாளுக்கு அர்ச்சித்து சைத்தியோபசாரம் செய்து, மங்களார்த்தியிட்டு, திரிதண்டத்துடன் மண்டியிட்டு வணங்கும் அழகு எவரையும் பரவசப்படுத்தும். ஸேவார்த்திகள் ஸேவிக்க கோஷ்டியுள் வீற்றிருந்து நாராயண நாம சங்கீர்த்தனம் செய்யும் தொனி செவித்துளையில் என்றும் நிறைந்தொலிக்கும். வணங்குகின்ற ஒவ்வொருவரையும் புன்முறுவலுடன் விசாரணை செய்யும் தோரணை மிகவும் சிலாகிக்கத்தகுந்தது. கோஷ்டி கலைந்தவுடன் காலக்ஷேபம் சாதிக்கும் அழகு எவரையும் அடிபணிய வைக்கும் ஆற்றல் வாய்ந்தது. பத்தரை மணிக்கு மாத்யாந்நிக ஸ்நான அநுஷ்டானங்களை முடித்து ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மனுக்கு மங்களார்த்தி செய்யும் கைங்கர்யம் தேவர்களாலும் கொண்டாடத்தகுந்தது. பெருமாள் தீர்த்தம் ஸ்வீகரித்து சடாரி சாதிக்கும் வைபவம் அனைவரும் சிரமேற்கத் தகுந்தது. மாலை மூன்று மணி முதல் ஐந்து மணிவரை காலக்ஷேபம் ஸாதிக்கும்பொழுது ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் ஆவேசம் என்றே தீர்மானிக்கவேண்டும். அநந்தரம் ஸாயம் ஸந்தியா அநுஷ்டாநங்களை முடித்து ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மனுக்குப் பானக ஆராதனம் கண்டருளும் காட்சி கண்பெற்ற பேறாகும். இதன்மேல் ஸேவார்த்திகளுடன் சம்பாஷிப்பதும், ஸந்நிதி லௌகிக கார்யங்களை நிர்வகிப்பதும் இரவு பனிரண்டு மணிவரை நிகழும். இவ்வண்ணம் ஸ்ரீ அழகிய சிங்கரின் தினசரி நடைபெறுகின்றது. விசேஷ தினங்கள் விசேஷ வைபவத்துடன் விமரிசையாக நடைபெறும்.

இவ்வாறு லக்ஷ்மீ நரஸிம்மன் "ஆஞ்ஞையிலை பெருமாள் ப்ரீதிக்காக இடைவிடாது தொண்டு செய்து, 'பொன்னைக்கொண் டுரைகல் மீதே நிறமெழ உரைத்தாற் போலே உன்னைக் கொண்டென்நாவகம்பால் மாற்றிற்றி உரைத்துக்கொண்டேன் உன்னைக் கொண்டென்னுள் வைத்தேன் என்னையும் உன்னுள்ளிட்டேன் என்னப்பா என் இருடீகேசா, என்னுயிர்க் காவலனே!" என்று துதித்து உனக்குக் கைங்கர்யம் செய்ய என்னை உரித்தாக்கினையே என்று நன்றிகூறுவார். நித்ய சூரிகளாகிய அநந்தனையும் கருடனையும் அத்யல்பமாக எண்ணி அடியேன் மனத்தாமரையில் உவந்து வைகி வாழும் எம்பிரானே! என்கண் அகலும்பொழுக என்னுள்ளே

உன்னை நினைந்திருந்தே சிரமந்தீர்ந்தென் நெஞ்சினெடியோனே ! என்று தியானித்து தொண்டாள் நெரும் இளைப்பையும் களைப்பையும் மாற்றிக் கொள்ளும் ஆற்றல் கொண்ட சாந்தமூர்த்தியாய் இன்று சதாபிஷேகம் பெற்று முதுமையில் இளமை எய்தி ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் அநுக்கிரஹத்துக்கும் பாத்திரராய் அடியோங்கட்குச் சரணாகதி புக சமீபராய் சுலபராய் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் எழுந்தருளிப் பிரகாசிக்கிறார்.

திருவேங்கடம் முதல் திருக்குறுங்குடி வரை சஞ்சாரம் செய்து மத்யஸ்தலமாகிய ரங்கமத்தியில் ஆசாரியராகிய ஸ்ரீ ரங்கநாதனுடையவும், பெரிய பெருமாளாகிய ஸ்ரீரங்கநாதனுடையவும் கிருபைக்கு சந்நத்தராய், ஸ்ரீ லக்ஷ்மீ தேவியின் திவ்யாஜ்ஞையின்படி ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீ ரங்க க்ஷேத்திரத்தில் திருவோலக்கமிருந்தாற்போல் ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் ஆஜ்ஞையின்படி ஸ்ரீ ரங்கக்ஷேத்திரத்தில் நித்ய வாசம் செய்து ஸ்ரீ ரங்கநாத ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மன் சந்நிதியில் சேவித்து ஆராதித்துப் பிரார்த்தித்துச் சிஷ்ய கோடிகளை ரக்ஷித்து சாந்த மூர்த்தியாய் திவ்ய சூரியாய்ப் பிரகாசித்து சேவை சாதித்தருளுகிறார் ஸ்ரீ அழகிய சிங்கர்.

சிஷ்ய கோடிகளாகிய நாமெல்லாம் ஆசாரிய சிரேஷ்டராகிய ஸ்ரீ அழகிய சிங்கரைப் பல்லாண்டு பாடுவோம்.

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய்ப் பொழிந்தொழுகும் வாய்மொழியும்
திருத்தொண்டும் பல்லாண்டு
வடிவார் ஆழிசங்கு வலமிடத்தே
பொறித்திலகு வண்கரமும் பல்லாண்டு
படியேற்றிப் பரமபதம் பாலிக்கும்
பரந்யாச வைபவமும் பல்லாண்டே.

வாழித் திருநாமம்

காரைக் குரிச்சிசெய் மாதவத்தோன் வாழியே
சீரங்க நாதரின் செல்வனே வாழியே
இலக்குமியின் சிங்கமே எங்குருவே வாழியே
வாதூல கோத்திர வள்ளலே வாழியே
ஜாநகி ராமனே சாந்தனே வாழியே
வேதாந்த விஞ்ஞான விற்பனனே வாழியே
ஆநந்த மார்கழியில் அவதரித்தோன் வாழியே
பூரட்டா திதிருநாள் புவியுதித்தோன் வாழியே
சடகோப தேசிகனால் குறிபெற்றோன் வாழியே
சடகோப இளம்பெருமாள் சரணடைந்தோன் வாழியே

சீரங்கநாத சடகோபன் இன்னருளால்
பார்போற்றும் யதீந்திரனும் பதம்பெற்றோன் வாழியே
தந்துபியில் தைமாதம் துறவுபெற்றோன் வாழியே.
லட்சுமீ நரசிம்ம சடகோபன் வாழியே
லட்சுமீ நரசிம்மன் தொண்டுசெய்து வாழியே
சதாபி ஷேகம்பெற் றெழில்பெறுவோன் வாழியே
பாடியப் பெரும்பொருளைப் பகர்ந்திடுவோன் வாழியே
ஆதிவண் சடகோபன் அருள்பெற்று வாழியே
சீரங்க நாத சடகோபன் திருவருளால்
நாதமுனி தேசிகரின் ஆயுளொடு வாழியே
சீனிவாஸன் பாடலைச் சிறப்பிப்போன் வாழியே
இன்னுமோரு நூற்றாண்டு எம்பெருமான் அருள்கொண்டு
இவ்வுலகில் சீடர்க்கு அருள்செய்து வாழியே
உடையவர் தரிசனத்தை உய்வித்தோன் வாழியே
நம்மாழ்வார் அம்சமாய் நண்ணினோன் வாழியே.

---

(3)

சரணாகதிப் பதிகம்

கட்டளைக் கலித்துறை.

சீர்வண் சடகோபச் சீர்நர சிம்ம யதீந்திரனே
சோர்வின்றி யுன்றன் றுணையடித் தொண்டு துணிந்தவெனைத்
தார்கொள் ளிரணியற் கொன்றவன் பாலற்குத் தஞ்சமீந்தான்
காரொன்று மேனிக் கருணை கரன்கழல் காத்திடுமே. 1

காரைக் குரிச்சிசெய் மாதவங்கண்டாங் கவதரித்தே
பாரைப் புரக்கும் பலகலைப் பண்டித பார்த்திபனைச்
சீரைப் பெறுவிசிஷ் டாத்வைத மார்க்கஞ் செழிக்கவந்த
சாரத் திருநர சிம்ம சடகோபர்த் தாழ்ந்தனனே. 2

என்னையும் என்குணக் கேட்டையும் பார்த்தரு ளீந்துநின்ற
நின்னரு ளிந்த நிலத்தினி லென்றும் நிலவிடுமால்
பொன்னவ ணுகத்தைப் போழ்ந்தருள் நாரணற் போற்றுகின்ற
நரநர சிம்ம சடகோபர் தாள்முடி யேற்றனனே. 3

புண்ணிய நோன்பு புரிந்துமிலேன்பதம் போற்றுகின்ற
நுண்ணருங் கேள்வி நுவன்றில னென்சிந்தை நோக்கியிருந்

தெண்ணரும் பாபங்களேகிடக் கண்ண னிணையடியென்
சென்னியிற் சூட அருள்நர சிம்மன் அடைக்கலமே. 4

நாதமும் சோதியு மாய்நின்ற நாரணன் நாதனென்றே
போதமு ருத்தொண்டர் பேதமை போக்கிடப் போந்தருள்நா
ஓதிடு வண்சட கோப நரசிம்ம யோகிமலர்ப்
பாதம லாற்படு பாவிக்கி யாதொன்றும் பற்றிலேயே. 5

ஆடிப் பலபிறப் பும்பிறந் தந்தமில் லல்லுற்றுத்
தேடித்திரிந்தனன் உய்வழி யொன்றும் தெரிந்திலனுய்
வாடிக் கடைசியில் கண்டு களித்து வணங்கி நின்றேன்
பாடித் திருநர சிம்ம சடகோபர் பாதங்களே. 6

சிந்தை நின் தாளிணை தாழ்ந்து நல் லன்பு சிறந்திடவே
விந்தைசே ருன்குணத் தீடுபட் டின்ப மிசைந்திடுமால்
முந்தை வினைகளும் போர்ந்திட நாவு முழக்கிடுமால்
எந்தை நரசிம்மவண்சடகோபன் இசையருளே. 7

வண்சடகோப நரசிம்ம யோகியர் மாதலைவ
கண்சட கோபர் பனுவலும் கண்ணன் கழலிணையும்
எண்சத வைகுந்த நாடுமெவ் வாறுனக் கின்பளிக்கும்
ஒண்சர ணங்களும் அத்தகைத் தேசரண் உற்றவெற்கே. 8

பத்தியும் யோகமும் பண்ணப் பதம்பெறுப் பாவமுற்றே
எத்திசை யும்புகல் பெற்றிலாக் காகம் எனவடைந்தேன்
சித்திகொள் சீரங்க நாத சடகோப தேசிகனுல்
சத்திகொள் வண்சட கோப நரசிம்மர் தாண்மலரே. 9

கூட்டும் விதியென்று கூடுங்கொ லோவெனக் கூறிநின்றேன்
நாட்டங்கண் டின்பம் பெறவுடைந் தேன்சரண் நானிலத்தோர்
வீட்டக ஞானந் தலைக்கொண்டு நாரணன் மேவநல்லோர்
ஈட்டங்கள் சூழ வருநர சிம்மர் இணையடியே. 10

இலக்குமி சேர்நர சிம்ம சடகோப தேசிகர்தாள்
இலக்கிய மென்றுவில் லார்ச்சீனிவாசனெனுஞ்சருமன்
விளக்கிய பாச்சர ணைகதி பத்தும் விளம்பிடுவார்
துளக்கமில் நற்குரு தாள் மூலஞ் சேர்வர்துளவனையே. 11

ஸ்ரீ:

அடியேன் காணிக்கை

[ஸ்ரீ உ. வே. வித்வான் ரா. ஸ்ரீநிவாஸதேசிகமய்யங்கார்.]

ஒரு நள்ளிரவு. மின்னலும் இடியும். பேய்க்காற்று கதவை மோது கிறது. தலைவியும் தோழியும் கண் விழித்துக்கொள்ளுகிறார்கள்.

தோழி :—காற்று எப்படி மும்முரமாய் அடித்துக் கதவைத் தாக்கு கிறது! மின்னல் எப்படி ஒளி வீசுகிறது! இடி எப்படி இடிக்கிறது!

தலைவி :—தோழி, இது காற்றென்று நீ நினைக்கிறாயா? காற்றல்ல; என் நாதன் கதவைத் தட்டுகிறான். அதோ 'பளிச்' சென்று தோன்று கிறதே, அது மின்னல் என்று எண்ணிவிடாதே, அது என் காதலின் வெற்றிக்கொடி. தூரத்தில் 'கட கட' வென்று கேட்கிறதே, அது இடி யின் முழக்கமல்ல; எனக்கு மாலையிட்டவருடைய இரதத்தின் ஒலி.

மேலே சித்திரிக்கப்பட்ட ஒரு தலைவியின் மனோநிலைதான் நம்மாழ் வாரின் நிலை, காண்கின்ற பொருள்கள் எல்லாவற்றிலும் அந்தராத்மாவா யிருக்கிற கண்ணன் வடிவு காண்பதுதான் அவருடைய அநுபவம். மல ரின் முறுவலிலும், காற்றின் இன்னிசையிலும், நீலவானிலும், கடலிலும் சர்வேச்வரனுடைய சொற்கடந்த சிறப்பை உணர்கிறார். அனேக பாசு ரங்கள் இத்தகைய உணர்ச்சிகளோடு ததும்பி நிற்கின்றன :

" மண்ணையிருந்து துழாவி வாமனன் மண்ணிதுவென்னும்
விண்ணைத்தொழுது அவன் மேவு வைகுந்தமென்று கை
காட்டும் ".....

" ஒன்றிய திங்களைக்காட்டி ஒளிமணி வண்ணனே! என்னும்
நின்ற குன்றத்தினை நோக்கி நெடுமாலே! வாவென்று கூவும்
நன்றுபெய்யும் மழைகாணில் நாரணன் வந்தானென்று
ஆலும் ".....

நமக்கு மண் மண்ணுகத்தான் படும்; ஆகாயம் ஆகாயமாகத்தான் தென்படும்; திங்கள் திங்களாய்த் தான் தோன்றும்; குன்று குன்றமாகத் தான் காணும். ஆனால், ஒரு கவிக்கோ அல்லது ஞானிக்கோ எண்ணம் வேறு, கனவு வேறு, பார்வை வேறு. ஒவ்வொரு பொருளிலும் ஒவ் வொரு நூதன ஒளியும் வர்ணமும் அவருக்குப் புலப்படுகிறது. அது தெய்வீக ஒளியாயும் வர்ணமாயு மிருக்கிறது. நாமும் அவருடைய அகக் கண்ணோடு பார்த்தால், நமக்கு ஒரு வியப்பும் உவகையும் தோன்றும்; அந்த உள்ள வெறியில் துள்ளவும் ஆரம்பித்து விடுவோம்.

நம்மாழ்வார் ஒரு ஞானி மாத்திரமல்ல; ஓர் ஆழ்ந்த கவியுங்கூட. ஆடி யாடி அகங்கரைந்து உள்ளம் தெளிந்தவர். அவர் மனம் பகவானுடைய எல்லையற்ற சௌந்தர்யங்களுக்கு உறை விடமாயிருக்கிறது. எல்லாவற்றிலும் பகவதம்சத்தைக் காண்கிறார்.

உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணன்.....சிந்தையாலும் சொல்லாலும் செய்கையாலும் 'அவர் பகவானை அடைகிறார். சில சமயங்களில் அவருக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள பேதநிலை அன்பிலே கரைந்து விடுகிறது. கடலையும் வானையும் காணுகவே கருதிப் பாடுகிறார்.

"காண்கின்ற நிலமெல்லாம் யானே யென்னும்
காண்கின்ற விசும் பெல்லாம் யானே யென்னும்
காண்கின்ற வெந்தீயெல்லாம் யானே யென்னும்
காண்கின்ற இக்காற்றெல்லாம் யானே யென்னும்
காண்கின்ற கடலெல்லாம் யானே யென்னும்".....

இந்நிலை அவருக்கு இயற்கையாகவே அமைந்து விட்டதா அல்லது பெருமுயற்சியால் வந்ததா? அவருடைய பாசுரங்களைத் துருவி ஆராய்வோர்க்கு, அவர் உள்ளத்திலே நிகழ்ந்த போர்களும் சோதனைகளும் நன்கு புலனாகும். அவர் பகவானைத் தேடிச் சென்ற யாத்திரையோ தொலையாத யாத்திரை; பாதையிலோ திக்குத்திசை தெரியாத இருட்டு; இடையூறுகளோ எண்ணிறந்தன.

"மாறிமாறிப்பல பிறப்பும் பிறந்து அடியை யடைந்து உள்ளம் தேறி
ஈறிலின்பத்திருவெள்ளம் யான் மூழ்கினன்."

நம்மாழ்வாரின் அகக் கண்ணில் தோன்றி மறைந்த காட்சிகள் அனேகம்; அவர் உட்செவியில் ஒலித்த ஒலிகள் பல. ஒரு சமயத்தில் களிப்பினால் ஆடுகிறார், பாடுகிறார்; மற்றொரு சமயத்தில் குழந்தைபோல் விம்முகிறார், அழுகிறார். ஒளி, இருட்டு, மழை, வெய்யில், முதலியன அவருடைய மனதில் மாறி மாறி வருகின்றன. 'கூவிக் கொளளும் காலம் இன்னும் குறுகாதோ' என்று ஒரு காலத்தில் ஓலமிடுகிறார்; மற்றொரு வேளையில் 'எனக்கார் நிகர் இந்நீ ரிலகில்?' என்று உள்ளம் பூரிக்கிறார்.

'நண்ணுதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்தேங்க
எண்ணுராத்துயர் விளைக்கும் இவையென்ன உலகியற்கை?'

என்றேங்குவர் ஒரு சமயம்.

'பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை.'

என்று ஆரவாரிப்பார் மற்றொரு சமயம்.

ஆழ்வாரின் மனம் ஆயிரம் நரம்புள்ள ஓர் வீணை. அதிலிருந்து எழும் நாதங்கள் பல. இப்பொழுது வியப்பு; இப்பொழுது வெறுப்பு; இப்பொழுது நம்பிக்கை; இப்பொழுது ஏமாற்றம்; முடிவில் புகலரிய ஒரு பெரிய சாந்தம். இந்த உபசாந்தத்தில் உதிக்கிறது ஒரு கீதம்:—

"சூழ்விசும் பணிமுகில் தூரியம் முழக்கின
ஆழ்கடலலை திரை கையெடுத்தாடின
ஏழ் பொழிலும் வளமேந்திய என்னப்பன்
வாழ் புகழ் நாரணன் தாமரைக் கண்டு கந்தே"

இத்தகைய நிரதிசய அநுபவம் எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய பாக்கியமே. இது ஒரு இனத்தாருக்கு மட்டும் உரியதல்ல. வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே.

நம்மாழ்வார் ஏற்றிவைத்த ஞானவிளக்கு அவிந்து போகாமல் பரம்பரையாய்க் காப்பாற்றி வரும் ஆசார்யர்களுள் தற்போது ஆஸ்தானத்தை அலங்கரித்துக்கொண்டிருக்கும் இவ்வழகியசிங்கர் சதாபிஷேக மஹோற்சவத்திற்கு அடியேன் ஸமர்ப்பிக்கும் காணிக்கை இது.

ஸ்ரீ

அழசியசிங்கர் தோத்திரமாலை

[புதுக்கோட்டை வித்வான் ப்ரம்மஸ்ரீ நா. கநகராஜய்யர் அவர்கள்]

திருவரங்கப் பெருநகரு ளனவரதம் தனைநினைவார்
சித்தம் வேட்ட
பெருவரங்கள் அருளவென வரவணையிற் கண்வளரும்
பெரிய பெம்மான்
இருவரங்கம் பகிர்ந்துகொள வளித்தருளும் அருளொருவன்
இறைமை தேற்றிக்
கருவரங்கம் புகுந்துமயங் குயிர்களை யாண் டருள்குரவர்
கழல்கள் போற்றி. 1

அரிசமய திவாகரனுங் குருகைநம்பி திருமரபென்
றறிந்தோர் வாழ்த்த
வருமுனிவர் பெருமரபில் அகோபிலமாந் திருப்பதியில்
மடத்தில் நின்று
திருவருளின் சிறப்பினையிவ் வுலகமெலா நன்குணரச்
செய்து வாழும்
குருமரபு பல்லாண்டு வாழ்கவென மன நிறையக்
கூறு வேமே. 2

திருமகளின் றிருநோக்கும் கலைமகளின் திருவருளும்
சேர வெய்திக்
குருவருளால் வாழ்வினலம் யாவுமெளி தடைந்திடலாம்
கோயில் சென்று
கருதுபொருள் விளக்கியருள் நரசிங்க யதிவரர்தாள்
கனிந்து போற்றி
வருபொருள் கொண்டகமகிழ்வார் ஒரு குறையும்
இலராதல் வாய்மை யன்றே. 3

தனக்கெனவே வாழ்தலிலாப் பிறர்க்குரிய
பெருந்தவத்துச் சான்றோர் தம் முள்
எனக்குவரு நில்யெதுவே யாயினு மிவ்
வுலகமெலாம் இன்பம் எய்த

நினைக் குரிய வெட் டெழுத்தை யுரைப் பனைத்
திருமால் முன் நிமிர்ந்து நின்ற
மனக்கருணை யுடையவர் தம் பெரும் புகழை
வழுத்தாதார் மனமோர் கல்லே. 4

எம்பெருமான் பெருங்கருணையளந்துரைத்த
வெம் பெருமான் இவனே யென்ன
உம்பருமே புகழ்வுரிய வெதிராசன் திருமாயில்
உபய வேதம்
செம்பொருளால் விளக்கியருள் நிகமாந்த
தேசிகனைத் தினமும் போற்றும்
இம்பருளார் குருவரருள் அகோபிலத்துத்
தலைவரையாம் இறைஞ்சு வோமே. 5

வடமொழியின் சுவைகனிய வழுதகவி
மழைபொழியும் வள்ளற் பெம்மான்
வடமலையா வளர்ந்தருளும் பெருமான்றன்
அடி நிலையை வழுத்தி யேத்தி
உடலுளமோ டுருகுகவி யொராயிரஞ் சொல்
தேசிகனை யுள்ளத் துள்ளும்
தொடர்புடைய வகோபிலத்துச் சடகோப
யதீந்திரரைத் தொழுதும் யாமே. 6

கருணைபொழி விழிப்பெருமான் தனையணுகு
மன்பர்களைக் காக்கும் வள்ளல்
அருளுருவன் அடைக்கலமே தனது கடைப்பிடியாக
அமைத்த தேவன்
ஒரு பொழுது மோய்வறவே யுயிர்க்கணலம்
பெருங்கருத்தால் உழைக்கும் வீரன்
திருமகளொடடியருளத் தமருமெனப்புகல் குரவர்
சிறந்து வாழி. 7

இருமொழியுந் தெய்வமணம் கமழுமென
வுலகரிய வெடுத்துச் சொற்ற
குரு மரபில் வருமுரிமை சிறந்திடவே
மறையிரண்டும் குறிப்பி னேர்ந்து
பொருளறிய வருப்பவருக் கிருமறையின்
முடி பொருளும் புகன்று தேற்றும்
பெருமுனிவர் அழகிய சிங்கரைப் புகழ்ந்து
வணங்கி நலம் பெறுவேம் யாமே. 8

அருளுளதோ இறைவனெனு மவனெருவன்
இருப்பதனை யறிய கில்லோம்
மருளுவதே பிறப்புரிமை யெமக்கெனவே
புகலுகின்ற மாந்தர்க் கெல்லாம்
பொருளுளதே யருளுருவப் பெரும் பொருளாம்
அதை யுணரப் பொருந்து முள்ளத்
தெருளுறுதிர் எனவருளும் அகோபிலத்துத்
தேசிகர் தாள் சிந்தித் துய்வாம். 9

உணர்வரிய பெரும் பொருளை வடமொழியால்
வியாதர் முனம் உரைத்துச் செல்லத்
தணவரிய தருக்கநெறி துணைகொண்டே
யதுதெரிந்து தாமே கண்ட
குணமுடைய நெறிகளையே குரவரெலாம்
கட்டுரைத்தார் கூறு மன்ன
மணமுடைய பெரும் பொருளை விளக்கு பணி
மடாதிபர்தம் வாய்ப்பே யன்றே. 10

(2)

திருநரசிங்கர் திருப்புகழ்

பொருளறிகின்ற வுளமுமைந்தபுலமையு நன்கு
பெறுவோர்கள்
அருள் கென நன்கு புகழுமரங்க அருமறை கண்ட
வொரு தேவே
மருள்கெட வெங்கள் மனமுறவந்து வரமருள்கின்ற
பொறி மேவாய்
திருநரசிங்க வழகிய சிங்கர் தினமும் வணங்கு
பெருமாளே. 1

அறிவிலகின்ற மனமுள மந்தர் அறியமறைந்த
திருமாலே
பொறிமறைகின்ற மறு வுரு வுண்ட பொலியுர வெந்தை
யருளாளா
நெறிகுறி கண்டு முறை முறை சென்ற நிலையினர் சிந்தை
மருவாயே
திறனர சிங்க வழகிய சிங்கர் தினமும் வணங்கு
பெருமாளே 2

தவ நெறி நின்ற தலைமை கொள்தொண்டர் தமதுளநின்ற
பொருளாவாய்
பவ மகல் கின்ற நெறி பயிலன்பர் பழகிய வின்ப
உருவானாய்
நவ மியல்கின்ற வுலகினினன்கு நவில்தவ மிங்க
ணருள்வாயே
திவ நர சிங்க வழகிய சிங்கர் தினமும் வணங்கு
பெருமாளே. 3

அரியுருவென்ப ரரனுருவென்ப ரயனுருவென்ப
ரறிவோர்கள்
அருவமதென்பர் உருவமதென்பர் அதுவித வென்பர்
பிறராவார்
தெரிய வுணர்ந்து நினதுருவன்பர் தெளிவது முண்டு
திருமாலே
திருநரசிங்க வழகிய சிங்கர் தினமும் வணங்கு
பெருமாளே. 4

அளியுழல்கின்ற மலர்கள் கொணர்ந்து னருளை நினைந்த
வடியார்கள்
தளவ மணிந்த வடியிலணிந்து துணிவு பிறந்து
மகிழ்வாரே
களவு புரிந்த மனமிசைவந்து கருணை பொருந்தி
யமர்வாயே
தெளி நரசிங்க வழகிய சிங்கர் தினமும் வணங்கு
பெருமாளே. 5

திரு நர சிங்கன் திருவடிகள் போற்றிப்
பெருவர நல்கும் பெரியோர்—அரிய
அழகிய சிங்கர் அளிமரபு சீர்த்தி
பழகிய வோங்க பயின்று.
வாழி நாசிங்க மால்கழல்கள் மாலடியார்
வாழி அகோபிலத்து மாதவர்தாள்—வாழி
அழகியசிங்கர் அணிமரபு வாழி
பழகிய மெய்ச்சீர் பயின்று.

(3)

அஹோபில லக்ஷ்மி நரஸிம்ம தசகம்

காப்பு

எப்பொருளு மாகி யியங்கி யியக்கு விக்கும்
மூப்பொருளாமோர் பொருளை முன்னி மனத்—தொப்பவைத்துச்
சிங்கவேள் குன்றமமர் தேவராபிரான் தோத்திரங்கள்
மங்களமாய் நாவே வழுத்து.

நூல்

பொன்பொருள் மனையின் வாழ்வுபொருந்திய மக்கள் தம்பால்
அன்பினை யவாவை நாட்டி யலைகின்ற நெஞ்சே கேளாய்
இன்பமும் துன்பு மோட வீறிலா னந்த நல்கும்
அன்புரு வுடைய பெம்மா னகோபிலத் தமர்ந்தா னன்றே. 1

இழிவினி னிங்கிமேன்மை யெய்தவே துணிந்தா யாகில்
மொழிகுவன் கேளாய் நெஞ்சே முக்குணப் பொருளின் மேலாய்ப்
பொழிதரு கருணை யோடு புரந்தரா தியரும் போற்ற
அழிவறு நரசிங்கன்றான் அகோபிலத் தமர்ந்தானன்றே. 2

அவியுண வமரர்க் காக்கி யவுணரை யழித்த தேவன்
குவிதகு முள்ளத்துள்ளே கோயில் கொண்டிருக்கும் வள்ளல்
பவவினை போக்கி நம்மைப் பாலிக்கும் கருணை மூர்த்தி
அவனர சிங்க ரூகி டகோபிலத் தமர்ந்தானன்றே. 3

திருநர சிங்க வேதத் தெளிவருள் பொருளே யென்று
பரிவொரு போற்றுவார்க்குப் பழமறைப் பொருள்விளங்கும்
குருவென நினைவார் முன்னர்க் குருவென வந்துநிற்கும்
அருள்மழை பொழியும் பெம்மான் அகோபிலத்தமர்ந்தானன்றே. 4

ஆயிரம் வடசொற் பாவால் அடிநிலைப் பெருமை பேசும்
நேயநல் லுளங் கொள்நங்கள் நிகமாந்த தேசிகேந்தின்
வாயினு மனத்தின்கண்ணு மவந்தமர்பொருளால் கண்டீர்
ஆயிரம் பணத்து மேவிய கோபிலத் தமர்ந்தா னன்றே. 5

வண்சட கோப நாம மாதவர் வணங்கி வாழ்த்த
எண்ணிய வெண்ண மெல்லாம் இனிதினி னியற்றி வைப்பான்
திண்ணிய வன்பர் போற்றத்திருப்பதி தோறும் வந்தான்
அண்ணல் சங்காழியேந்திய கோபிலத்தமர்ந்தானன்றே. 6

வேண்டுவார் வேண்டிற் றெல்லாம் விரைவினி லுதவுமாறு
நீண்டதோ ருருவோ டந்நாள் நிமிர்ந்துல களந்த நாதன்
பூண்டபல் பணிகளோடு பொன்மய வுருவந்தாங்கி
ஆண்டருள் செய்ய வந்தான் அஹோபிலத்தமர்ந்தா னன்றே.

ஆதிவண் சடகோ பேந்திரர் அமைத்த நற்பணியே பூண்டு
வேதியர் பிறர்க்கு மெய்ம்மை விழுப்பொருள் விளக்கஞ் செய்து
தீதில்மா நரசிங்கன்றன் றிருவடித் தொண்டர் பல்லோர்
ஆதர மிகவே போற்றவ ஹோபிலத் தமர்ந்தா னன்றே. 8

வணங்குவோர் தொழுவார் முன்னர் வந்தருள் கோலத்தோடு
குணங்களால் உயர்ந்து தன் பேர் கொண்ட மாதவர் பூசிக்க
மணங்குலாந்துள வணிந்து மழையென விளங்குங் கண்டூர்
அணங்காவணை யினீங்கிய கோபிலத் தமர்ந்தானன்றே. 9

பொறைகுண முடைய மேலோர் புகழ்ந்திடு பொருளாய் நின்றான்
மறையொரு நான்கு காணு மறைப் பொருளான் கண்டாய்
நிறையுறு நெஞ்சே யன்ன நிமலனை நாடுவாயேல்
அறைகுவன் கேளாய் அன்னன் அஹோபிலத் தமர்ந்தானன்றே. 10

உரையுரை.

பொருள் பெறு சொல்லாற்பனு வலியற்றும் புலமையிலேன்
உரிமையினன்பு துணைகொடு பாடியுவந்தணிந்தேன்
திருநரசிங்க னருட்கணமவாவெனச் சேர்த்தருளாய்
திருநரசிங்கனடிப் பணிபூண்டருள் தேசிகனே.

ஸ்ரீ :

ஸ்ரீ அழகிய சிங்கர் வைபவம்.

[ஸ்ரீ உ. வே. வித்வான் குரிச்சி. சே. லக்ஷ்மீ நரஸிம்மாசார்யர்]

விநதவிவியஹ்ரிதெ வெஹுஹ்ரிஜாவிஹாதெ
விஜமுஹ்ண வரீதெ வீதராகநஹ்ரிதெ ।
ஹவதாஹ்ர ஈவிததெதாஷா ஹத்திஹ்ரிவா ஔநீஷா
ஔ விநஔஜிவெஹு ஜுவஹுணி ஸ்ரீ: நரஸிம்ஹெ ॥

